**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.02.2020

Accepted: 15.05.2020

Published: 01.07.2020

Citation:
Thiruveni, V. (2020). The Dignities of the King Described in Sulamani. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 10–16.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3398

*Corresponding Author:
thiruveni27@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Dignities of the King Described in Sulamani

**Dr. V. Thiruveni**

*Assistant Professor of Tamil, Directorate of Distance Education*

*Alagappa University, Karaikudi, Tamil Nadu*

https://orcid.org/0000-0002-3519-3725

**Abstract -** The Kappiyams, or Epics, were written as means of guiding humanity under the 4 codes of life, Aram (virtue), Porul (wealth), Inbam (pleasure), Veedu (spiritual release). Among these, the epics which followed all four were segregated as Aimperum Kappiyangal or The Five Great, Epics, while the epics which followed one or two of the four were segregated as The Five Minor Epics. One of the most important among the five minor epics is Sulamani, written by Tholamozhi Thevar. Through his epic, he guided not just the people, but also the rulers of the country on the mandates a king must follow. This paper intends to review topics such as the guidance to the king like the powers of a king, the troubles of materialistic pleasures, ruling under the guidance of informed counsel, the greatness of patience, providing quality education, standing by justice all the time, warming up to the people like the moon, dying people wanting to live some more under the king's rule, the rule as a penance, the ways to rule the skies, and protecting people's life as his own and for guidance for the subjects such as people always following the footsteps of their king and people being potient and accepting when a king's rule is difficult and reaping its benefits later. Whatever be the epic, it is the duty of a poet to judge it based on the principles of morality it espouses. Sulamani portrays a king's rule; based on justice and the effect it has on his subjects. It also puts forward the fact that a good rule is judged based on the livelihood of the subjects. By doing this, gives us deep insights into the rule of the country in it's contemporary times.

**Key Words:** Sulamani, Epic, King, King's Rule, Scepter rule, Dignity.

**References**

1. Perumazhippulavar B.V., Somasundaranar, S.A., Ramasamy Pulavar, S.A., Sulamani Moolamum Uraiyum (Part I), Tirunelveli Saivasithantha Noorpathippu Kazhagam Limited, Tirunelveli – 6, February 1962.
2. Varatharasanar, M, Thirukkural Theliurai, Kazhaka Vezhiyidu, Edition 1949.
3. Gopalakrishnamachariyar, Y.M., Kambaramayanam Moolamum Uraiyum, Uma Pathipagam, George Town, Chennai.
4. Saivakesavaraya Mudaliar, Pazhamozhli Nanooru , Pachaiyappa College, Chennai, S P C K Press, 1977.
5. Trikadugam, with a speech by Thirukkotiyoor Ramanujasariyar, Jaffna Nallur Arumuganavalavar, Chidambarasaiva Prakasa Vidyasalai Dharmaparipalikar, Visuvanatha Pillaiyar, Chennapattinam, published on Vidhyanupalanaya Nadira Road, Sixth Edition.
6. Nanmadi kadigai moolamum uraiyum, Madurai Tamil Sangam, Senthamil Prasuram 13, Sangam Muthira Road, Madurai. Second Edition, 1911.

# சூளாமணி காட்டும் மன்னனின் மாண்புகள்

***முனைவர் வெ. திருவேணி***
உதவிப் பேராசிரியர், தமிழ் தொலைதூர கல்வி இயக்ககம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

***ஆய்வுச்சுருக்கம்:*** *மனிதவாழ்வியலைநெறிப்படுத்தும்அமைவுகளாகக்காப்பியங்கள்உருவாக்கப்பெற்றன. அவற்றுள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் ஏற்று நிற்பவை பெருங்காப்பியமாகவும், இந்நான்கினுள் ஏதாவது ஒன்றையோ அல்லது இரண்டையோ அடியொற்றி நிற்பவை சிறுகாப்பியம் என பகுக்கப்பெற்றன. முறையே அவை ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுங்காப்பியம் என வழங்கப்பட்டன. ஐஞ்சிறுங்காப்பியங்களில் முக்கியமான ஒன்று சூளாமணியாகும். இக்காப்பித்தை இயற்றியவர் தோலாமொழித் தேவர். சூளாமணி என்னும் காப்பியத்தின் வாயிலாக மக்களுக்கு மட்டுமன்றி மன்னர்க்கும் அறிவுரை புகட்டும் வகையில் ஓர் அரசன் எந்நிலையில் ஆட்சி புரிய வேண்டும் என்பதனைத் தன் காப்பியத்தின் வாயிலாகக் கூறியுள்ளார். அவை அரசனின் ஆற்றல், சிற்றின்பத்தால் வரும் துன்பம், அமைச்சரை ஆலோசித்து ஆட்சி புரிதல், பொறுமையின் பெருமை, அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே, மக்களைப் பாதுகாத்தல், நன்கல்விதனை வழங்குதல், எந்நிலையிலும் நீதி வழுவாமல் காத்தல், மக்கள் மடிந்து போகாமலும் மடியும் தருணமும் மன்னன் நாட்டில் இன்னும் சற்று காலம் வாழ்ந்து உயிர்துறக்கலாம் என எண்ணுதல், திங்கள் போன்று மக்களுக்குக் குளிர்ந்த தன்மை கொண்டவனாய் இருத்தல், அருந்தவம் போன்றது அரசாட்சி, தவமும் மன்னனின் அரசாட்சியே, விண்ணை ஆள்வதற்கான வழிமுறைகளாகவும், அரசன் ஆட்சி சற்றே கடினமாக இருப்பினும் மக்கள் பொறுத்துப் பின்வரும் இன்பத்தைப் பெற வேண்டும், மக்களின் உயிரைத் தன் உயிரெனக்காத்திடல் வேண்டும் போன்ற பல அறம் சார்ந்த ஆய்விற்கான களமாக இக்கட்டுரை அமைகிறது. மேலும் எத்தகைய காப்பியமாயினும் அவற்றை அறம் சார்ந்து நிலையில் வகுப்பதே புலவனின் மாண்பு. இக்காப்பியத்தின்வழி மன்னன் அறத்தினின்று ஆட்சிபுரியும்நிலையும், அதனால்ஏற்படும்மக்கள்வாழ்வியலும் எடுத்தியம்பப்பெறுகிறது. மேலும்பல்வேறானநோக்கில்பல்வேறுகண்ணோட்டங்களில் ஆய்விற்கானகளமாக சூளாமணி அமைகிறது. மக்களின் வாழ்வைப் பொருத்தே மன்னனின் செங்கோல் சிறப்பு அமையும் என்பதற்கு வலுசேர்க்கும் வகையிலும் காப்பியக்கால ஆட்சியை விளக்கும் வகையிலும் இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *சூளாமணி, காப்பியம், மன்னன், அரசாட்சி, செங்கோல், மாண்பு*

பெருங்காப்பியம் என்பதற்கும் சிறுகாப்பியம் என்பதற்கும் இலக்கணம் கூறவந்த தண்டியாசிரியர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருளையும் தன்னகத்தே அடக்கிக் கூறும் நூல் பெருங்காப்பியம் ஆகும் என்றும், அவற்றுள் சிலவற்றை விடுத்து ஒன்றையோ, இரண்டையோ கூறும் நூல் சிறுகாப்பியம் ஆகும் என்றும் கூறலாயினர். சூளாமணி என்பது தொன்மை என்னும் வனப்பினைச் சிறப்பாகக் கொண்டு இயற்றப்பட்ட நூலாகும்.

தொன்மை என்பது பழைய கதையைப் பொருளாகக்கொண்டு இயற்றப்படும் தொடர்நிலைச் செய்யுளாகும். மேலும் இச்சூளாமணி அடிநிமிர்ந்து ஓடாமல் நான்கடியில்

"அம்மை" என்னும் வனப்பினைத் தழுவி எழுந்த நூலாகும். இச்சூளாமணி தோன்றிய காலத்தை வரையறுத்துக் கூறும் வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஒரு சாரார் இந்நூல் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய நூல் என்றும் கருதுகின்றனர். இந்நூல் கடைச்சங்க காலத்திற்குப் பின்னரும் தேவாரக் காலத்திற்கு முன்னரும் நிகழ்ந்த காலத்தே தோன்றிய நூல் என்றும், அக்காலத்தே தோன்றிய நூலுள்ளும் சிந்தாமணி பின்னர்த் தோன்றிய நூல் என்றும் ஊகிக்கலாம்.

சூளாமணி என்பது "முடிமணி" என்னும் பொருளுடையதாம். ஒரு புலவர் காலணியாகிய சிலம்பினைச் செய்து தமிழன்னையின் திருவடிகளில் அணிந்தனர். மற்றொரு புலவர் மணிமேகலையைத் தமிழன்னையிடையில் பூட்டினர். மற்றொருவர் சிந்தாமணியினை அவள் நெஞ்சினில் பதித்தார். வளையும் குண்டலமும் செய்தணிந்த புலவரும் உளர்.

சூளாமணி என்னும் இக்காப்பியத்தினை இயற்றி அருளியவர் தோலாமொழித் தேவராவார். இந்நூல் கற்போர்க்கு எண் வகைச் சுவைகளையும் பொழிந்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கனையும் நன்கு விளக்கி அவர்தம் அறியாமை இருளை அகற்றும். இதனைப் பயில்வார் சிறந்த சான்றோராவது உறுதி. அந்தவகையில், அரசனின் மாண்புகள் குறித்து இக்கட்டுரை வழி அறியலாம்.

### அரசனின் ஆற்றல்

**"ஆற்றல் மூன் றோதப்பட்ட வரசர்கட்**
**கவற்றின் மிக்க**
**ஆற்றான் சூழ்ச்சி யென்ப தாதலா**
**லதனையாயும்**
**ஆற்றலா ரமைச்சராக வமைச்சரோ**
**டமர்ந்து செல்லும்**
**ஆற்றலா னரச னாகி னரியதொன்**
**றில்லை யன்றே"**
**(சூளா.250)**

உலகத்தை ஆளும் மன்னர்கட்கு, நூல்களால் ஓதப்பட்ட ஆற்றல் மூன்றாகும். அவற்றில் பெருமை, அறிவு, முயற்சி என்னும் மூவகை யாற்றலுள்ளும் தலை சிறந்த ஆற்றலாவது நடுவனிற்ற அறிவாகிய சூழ்ச்சியே எனலாம். ஆகையால் அச்சூழ்ச்சியை ஆராய்ச்சி செய்யும் அறிவு வலிமையுடையார், தனக்கு அமைச்சராகக் கொண்டு, செயல்களைச் செய்து செல்லும் மன்னனாக இருப்பானாயின் அம்மன்னனுக்கு அருமையானது ஒன்றும் இவ்வுலகத்தில் இல்லை.

### சிற்றின்பம் துன்பம் தரும்

சிற்றின்பத்தில் மயங்கி, அழுந்திய அரசர்கட்கு, அமைச்சர்களால் உண்டாகும் சூழ்ச்சிப் பெருமையாகிய ஒப்பற்ற ஆற்றல் இல்லையாய்விடின், அவ்வரசர்களுடைய அரசாட்சியானது, யானைப்பாகனுக்குரிய நூலினை உணராதானும், பேதைமை பொருந்தியவனும் ஆகிய ஒருவன் கள்ளுண்டதன் பின்னர், மதம் கொண்ட யானையைச் செலுத்த அதன்மேல் ஏறினால் போன்றதாகும். இதனையே,

**"வடந்திகழ் முலையினார்தலங் காமத்**
**தின் மதர்ந்த மன்னர்க்**
**கடைந்தவர் மாண்பு மாங்கொன்**
**றில்லையே லரசர் வாழ்க்கை**
**கடந்தவழ் கடாத்த வேழங் களித்தபின்**
**கல்வி மாணா**
**மடந்தவ ழொருவன் மேல்கொண்**
**டன்னதோர் வகையிற் றாமே"**
**(சூளா.251)**

என்ற பாடல் வழி காமப வாழ்க்கையில் படிந்த அரசர் துன்பமடைவர் என்பதை உணரலாம்.

### அறநூல்கள் உணர்ந்த அமைச்சன் துணை கோடல்

அரசர்களுடைய அரசாட்சியானது அறநூல்களை உணர்ந்து செயல்களைப் புரியும் அமைச்சனுடைய சூழ்ச்சியைப் பற்றுக்கோடாக நிகழ்த்தல் வேண்டும். அமைச்சர்கள் துணை பிழைப்பின், ஒளியுள்ள

பற்களையுடைய பாம்பினாலோ தீண்டப்பட்ட ஒருவன், அந்நஞ்சு தீர்க்கும் உபாயத்தில் தப்பி விட்டாற்போன்று, அவ்வரசாட்சியை அழித்து விடும். இதனை,

**"சுந்தரச் சுரும்புண் கண்ணிச் சூழ்கழ**
**லரசர் வாழ்க்கை**
**தந்திர மறிந்து ஆழ்வான் சூழ்ச்சி சார்ந்**
**தமையல் வேண்டும்**
**மந்திர வழுவு மாயின் வாளெயிற் றரவு**
**காய்ந்து**
**தந்திரந் தப்பி னாற்போற் றன்னையே**
**தபுக்கு மன்றே"**

**(சூளா.252)**

என்கிற பாடல்வழி, பல்லாற்றாறானும் கேடு நேருதற்கிடமானஅரசாட்சியைமேற்கொண்டவன் அக்கேட்டினை அகற்றும் அமைச்சரைத் துணையாகக்கொள்ளுதல் வேண்டுமென்பது அறியாலாகின்றது.

### பொறுமையின் பெருமை

சந்தன மரங்களைப் போல நல்வினைக்கு உரியவர்களாகிய அரசர்கள், அமைச்சர் முதலான கீழானவர்கள்செய்த பிழைகளை, அஃதாவது இகழ்தல் முதலியவைகளைப் பொறுப்பார்களாயின் உலத்துயிர்களெல்லாம் அவ்வரசனை வழிபட்டு நின்று அவனைப் பணியுமென்கிறது சூளாமணி. இதனை,

**"கண்ணிய கடாந்த வேழங் கவுளினா**
**னுரிஞப் பட்டுத்**
**தண்ணிய தன்மை நீங்காச் சந்தனச் சாதி**
**போலப்**
**புண்ணியக் கிழவர் கீழோர் பிழைத்தன**
**பொறுப்ப வாயின்**
**எண்ணியல் வளாக மெல்லாம் வழிநின்று**
**வணங்கு மன்றே"**

**(சூளா.262)**

என்ற பாடலின் வழி அறியலாம்.

### அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

அரசர்களுடைய விண்ணுலகமும் இன்பத்தையடைதற்குக் காரணமாகச் சிறந்து விளங்குகின்ற வெண்கொற்றக் குடையானது, நிலவுலகம் இன்பத்தையடையுமாறு புரக்கும் வரன்முறையிலிருந்து நீங்கி, உயிர்களை வருத்தத் தொடங்குமானால், கண்ணானது மகிழ்ச்சியை அடையுமாறு மலரும், மணம் பொருந்திய பெரிய தடாகங்களும் பூஞ்சோலைகளும், மிகுந்த குளிர்ச்சியைக் கொண்டிருந்தனவாயினும் அவைகளும் மிகக் கொதிப்பைக் கொண்டனவேயாகும். இதனை,

**"மண்குளிர் கொள்ளக் காக்கு மரபொழிந்**
**தரசர் தங்கள்**
**விண்குளிர் கொள்ள வோங்கும்**
**வெண்குடை வெதும்பு மாயிற்**
**கண்குளிர் கொள்ளப் புக்குங் கடிகயத்**
**தடமுங் காவும்**
**தண்குளிர் கொள்ளு மேனுந் தாமிக**
**வெதும்பு மன்றே"**

**(சூளா.264)**

என்னும் பாடல் அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்பவாகலின், எல்லாப் பொருள்களும் அரசனைப் போல் விளங்கும். மேலும் கடல் வெதும்பியவிடத்து, அதனில் வாழ் உயிர்கள் யாவும் துன்பத்தை அடைதல் போல், அரசன் தீயவனாயின் உலகத்திலுள்ள உயிர்கள் யாவும் கொடிய துன்பத்தை அடையுமென்பர்.

### உலகின் கண்கள் மூன்று

உலகத்தின் கண்கள் என்று சொல்லப் பெறுவன மூன்றாம். அவை உயிர்களைப் பாதுகாத்தல் தொழில் வல்லவனான அரசன், கல்வியறிவுடைமை, அழகிய விசும்பின் கண் சுழன்று ஓடுகிற கதிரோன், துன்ப இருளையும், கல்வி அறியாமையாகிய அகவிருளையும் வெய்யவன் புற இருளையும் போக்கி வழி காட்டற்குரிய கண்களாகும். இவற்றுள் முதலாவதாக வைத்த கண் நல்லரசன் இல்லையானால் இவ்வுலகத்திற்கு இருளை நீக்கும் வகை பிறிது இல்லை எனலாம். எவ்வாற்றானும் துன்ப இருள் தொலைதலே உயிர்கட்குச் சிறப்பாகையால் அவ்விருளை அகற்றும் அரசராகிய கண், தலைக்கண் வைக்கப்பட்டது எனலாம்.

***“கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்***
***விண்ணினைச் சூழல் வோடும் வெய்யவ னென்னும் பேரார்***
***எண்ணினுட் டலைக்கண் வைத்த கண்ணஃ தில்லை யாயின்***
***மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்னா”***
***(சூளா.268)***

**விண்ணுலக வாழ்வை நாடார்**

செங்கோன் மன்னர் வாழும் நாட்டில் கூற்றும் புகுவதற்கு அஞ்சும். கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டில் கூற்றமும் பிணியும் நடமாடும் என்பார். அவற்றையும் கோலோடு சேர்த்து எண்ணினர். நாட்டு மக்களிடத்திலே மன்னர்கள் செலுத்தும் கொடுங்கோன்மையும் உயிர்களைக் கவரும் கூற்றமும், பிணியும், கடலால் சூழப்பெற்ற உலகத்தின் கண் இல்லாதொழியின், எவர் செல்வோமென்று கருதுவார்கள். ஆகவே பொன்னாட்டினும் இன்பஞ் சிறந்த நாடாகும். நாட்டின்கண் வாழ்வாரேயொழிய வானவர் நாட்டை விரும்பார் என்பதன் மூலம் செங்கோன்மையைக் குறிப்பாகச் சிறப்பித்தமையைக் கீழ்வரும் பாடல் வழி உணரலாம்.

***“குடிமிசை வெய்ய கோனுங் கூற்றமும் பிணியு நீர்சூழ்***
***படிமிசை யில்லை யாயின் வானுள்யார் பயிறு மென்பார்***
***முடிமிசை திவள வேந்தர் முறைமுறை பணிய விம்மி***
***அடிமி சைநரலுஞ் செம்போ னதிர்கழ லரச ரேறே”***
***(சூளா.266)***
***(5.மந்திர சாலைச் சருக்கம்)***

**திங்கள் போன்றவன் அரசன்**

குளிர்ந்த ஒளியையுடைய திங்களைப் போல விண்மீன் கூட்டங்கள் தாங்களொருங்கு கூடினும், பேரொளியாகச் சிறந்து திகழமாட்டாமையை அறிதல் போல, மக்கள் பலர் ஒருங்கு கூடி எத்தகைய மாண்புமிக்க செயலைப் புரியினும், அரசர்களைப் போல் சிறந்து திகழமாட்டார்கள் என்பதைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

***“தண்சுடக் கடவுள் போலத் தாரகைக் குழாங்க டாமே***
***விண்சுடர் விளக்க மாக விளங்கல வேந்தர் போல***
***மண்சுடர் வரைப்பின் மிக்க மக்களு மில்லை கண்டாய்***
***கண்சுடர் கனலச் சீறுங் கமழ்கடாக் களிற்று வேந்தே”***
***(சூளா.270)***

**அருந்தவம் போன்றது அரசாட்சி**

அருந்தவம் புரிதலும் அரசாட்சி செய்தலும் செயற்கருஞ் செயல்களாம். இவைகளைப் புரிவார் வருத்தத்தினைப் பொருட்படுத்தாது உள்ளத்தினைத் தம் வழிப்படுத்துதல் வேண்டும். உள்ளம் அடக்கப் பெறாமல் அதன் வழியில்தானே செல்லுமாயின் பெருந்துன்பத்தினை உண்டாக்கும். இதனையே கம்பநாடரும்,

***“கோளு மைம்பொறி யுங்குறை யப்பொருள்***
***நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்***
***ஆளு மவ்வர சேயா சன்னது***
***வாளின் மேல்வரு மாதவ மன்னனே”***
***(கம்ப.மந்தரை சூழ்ச்சிப் படலம்.14)***

என்ற பாடலின் வழி உரைக்கின்றார்.

சூளாமணியில் மந்திரசாலைச் சருக்கத்தில் அருந்தவமும் அரசாட்சியும் ஒன்று.

***“அருந்தவ மரைச பார மிரண்டுமே யரிய தம்மை***
***வருந்தியு முயிரை யோம்பி மனத்தினை வணக்கல் வேண்டும்***
***திருந்திய விரண்டுந் தத்தஞ் செய்கையிற் றிரியுளு மாயிற்***

**பெருந்துயர் விளைக்கு மன்றெ பிறங் குதார் நிறங்கொள் வேலோய்"**

**(சூளா.271)**

குருதியாற் செந்நிறத்தினையுங் கொண்ட வேல்படையுடைய அரசன், அருமையான தவத்தை தாங்குதலும், அரசாட்சிச் சுமையைத் தாங்குதலும் ஆகிய இவ்விரண்டு செயல்களுமே உலகத்தின்கண் செய்தற்கரிய செயல்களாகும். தம்மை வருத்தப்படுத்தியும், மன்னுயிரைப் பாதுகாத்தும் மேலும் உள்ளமானது அதன் வழியே ஓடாது தம் வழியே வருமாறு வசமாக்குதலும் வேண்டும். திருத்தமாகச் செய்யப்பெறவேண்டிய இவைகளிரண்டும், தத்தமக்குரிய செயல்முறையில் மாறுபடுமானால் மிகுந்த துன்பத்தினை உண்டாக்குவனவாம். மேலும் அருந்தவமும் அரசாட்சியும் ஆற்றல் அரிது.

**"மாந்தலை யிணங்கி வான்றோய் மணிவளர் வயிரக் குன்றம்**
**உரந்தனக் குயர வேந்தி யுய்த்திடு மொருவற் கேனும்**
**அருந்தவ மரைச பார மவைபொறை யரிது கண்டாய்**
**இரந்தவர்க் கீட்டப்பட்ட விருநிதிக் கிழவ வென்றான்"**

**(சூளா.273)**

மலைதூக்கும் ஆற்றல் வாய்ந்தவனான திருமாலுக்கும் தவமும் அரசாட்சியும் செயற்கருஞ் செயல்களாம் என்றவாறு, இவ்விரண்டு சுமைகளையும் மிகவும் அருமையாகும். இதனை அரசன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**விண்ணுலக ஆட்சிக்கு இருவழிகள்**

அருந்தவம் புரிவோரும் அரசாட்சி புரிவோரும் விண்ணுலக ஆட்சி பெறுவர்.

**"அந்தரந் திரியுஞ் செய்கை யமரர்தம் மரசு வேண்டி**
**இந்திர வுலகங் காணு நெறியவை யாவை யென்னின்**
**மந்திரம் வழாத வாய்மை மாதவம் முயற லன்றேல்**
**தந்திரத் தழுவிச் செங்கோ றனர்விலன் றரித்த லென்றான்"**

**(சூளா.272)**

விண்ணிலே இயங்குதலைச் செய்யும் செயலினையுடைய தேவருலக அரசாட்சியை விரும்பி, இந்திரவுலகத்தை அடையும் வழிகள் எவைகளோ எனின், மந்திர நெறிகளிலே தவறாத மெய்ம்மையான சிறந்த தவத்தை முயன்று செய்தல் இல்லாவிடின், சூழ்ச்சி முறையைப் பொருந்தி நெறிதவறாத ஆட்சிமுறையை தளர்ச்சியடையாதவனாக மேற்கொள்ளுதல் என்பது பொருளாகும்.

**அரசன் தீயவனாயின் மக்கட்கு புகலிடம்**

**"தீயினம் படர்ந்து வேந்தன் செறுவதே புரிய மாயிற்**
**போயினம் படர்ந்து வாழும் புகலிட மின்மை யாலே**
**வேயினம் படர்ந்த சாரல் வேங்கையை வெருவிப் புல்வாய்**
**மாயினம் படர்ந்த தெல்லாம் வையகம் படரு மன்றே"**

**(சூளா.265)**

மலையை அடுத்து விளங்கிய ஒரு நாட்டில் கொடிய வேங்கையொன்று விலங்குகளைக் கண்டவாறு அடித்துத் தின்று கொண்டிருந்தது. அக்காட்டிலிருந்த மான்களும் பிற விலங்குகளும் ஒன்றுகூடி வேங்கையின் கொடுமையினின்றும் தப்புவதற்கு வழியாது என்று எண்ணமிட்டன. பிறகு அவைகளெல்லாம் வேறு காட்டிற்குச் செல்வதென்று முடிவுசெய்து அவ்வாறே சென்றன. புதிதாகச் சென்ற காட்டிலோ ஒரு கொடிய சிங்கம் இருந்தது. அச்சிங்கம் முன் காட்டிலிருந்த வேங்கைப் புலியினும் பன்மடங்கு கொடியது. அது புதிதாக வந்து புகுந்த விலங்கினங்களைக் கண்டு மிக மகிழ்ந்து அவைகளை யெல்லாம் கொன்று தின்று தீர்த்தது. ஆகையால் ஓர் அரசன்

கொடியவனாக இருப்பின் அவன் கொடுமைக் காற்றாத மக்கள் பிற நாடுகட்குச் சென்று அங்குள்ள கொடுங்கோல் அரசர்களால் நெடுந்துன்படைந்து அழிந்து ஒழிவர். ஆதலால் போயினம் படர்ந்து வாழும் புகலிடமின்மையாலே என்றார்.

**அறவழி நிற்கும் அரசன் செங்கோலே துணை**

**"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**வேந்தமை வில்லா நாடு''**

***(குறள்.740)***

என்பார் வள்ளுவனார். இவ்வுலகத்தின்கண் ஒருவரை மற்றொருவர் வருத்துதல் செய்ய துன்பமுறாதபடி பார்த்து, அவற்றை இனிய தன்னுடைய உயிரைப்போல பாதுகாக்கும் அறவழியின் கண்ணே சிறந்து விளங்குகின்ற அரசர்களுடைய அடி நிழலையல்லாமல், எத்தகையோர்க்கும் சிறப்பானது மற்றொன்றுமில்லை. இதனை அரசன் உணரவேண்டும் என்பது பொருளாகும்.

**"ஒருமையாற் றுன்ப மெய்து யொருவனை யும்மை யாலே**
**திருமையான் முயங்குஞ் செல்வச் செருக்கோடு திளைப்பநோக்கி**
**இருமையு மொருமை யாலே யியற்றிலி னிறைவன் போலப்**
**பெருமையை யுடைய தெய்வம் பிறிதினி யில்லை யன்றே"**

***(சூளா.267)***

அரசியல் நன்கு அமையாவழி இவ்வொரு பிறப்பிற்றானே பெரிதும் துன்பம் எய்து தற்குரியவனாகிய ஒரு மனிதனை, கழிந்த பிறப்பிலியற்றிய வினையாலே, நன்மையொடே பொருந்த தார்குங் காரணமான, செல்வங்களின் நுகர்ச்சியாலே தோன்றாநின் களிப்புடனே பொருந்தி மகிழும்படி தன் அருட்கண்ணாலே பார்த்து இவ்வொரு பிறப்பின் மாத்திரையானே இம்மை மறுமைகளிரண்டிடத்தும் நுகர்தற்குரிய இன்பங்களை நுகரும்படி செய்தலால், அவனுக்குத் தன் மன்னனைப் போன்ற தொழுதற்குரிய சிறப்புடைய கடவுள் வேறொன்று ஆராய்ந்து காணுமிடத்து இல்லையாகும். கண்ணெதிர் தோன்றும் அரசன் அத்தெய்வத்தின் மிக்க பெருமை உடையன் என்பதை அறியலாம்.

அரசர்கள் அருளுள் செங்கோன்மையுடையவராயிருப்பார்களாயின் அவர் மக்களும் பின்பெறுவது பெருமை ஆகும். மன்னர்களுடைய பெருமையே மக்களுக்கும் என்பதை இதன்மூலம் அறியலாம்.

**பார்வை நூல்கள்**

1. சூளாமணி மூலமும் உரையும் (முதற்பாகம்), (1962) பொ.வே. சோமசுந்தரனார், சு.அ.இராமசாமிப் புலவர், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, சென்னை.
2. திருக்குறள் தெளிவுரை (1949), மு.வரதராசனார், கழக வெளியீடு.
3. கம்பராமாயணம் மூலமும் உரையும், வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார், உமா பதிப்பகம், சென்னை.
4. பழமொழி நானூறு, சைவகேசவராய முதலியார், பச்சையப்பா கல்லூரி, சென்னை, S P C K Press, 1977.
5. திரிகடுகம், திருக்கோட்டியூர் இராமாநுசாசாரியார் செய்த உரையுடன், யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுகநாவலவர்கள், சிதம்பரசைவப் பிரகாச வித்தியா சாலைத் தருமபரிபாலிகர், விசுவநாத பிள்ளையார், சென்னபட்டிணம், வித்தியாநுபாலனய நதிர சாலையில் பதிப்பிக்கட்டது, ஆறாம் பதிப்பு.
6. நான்மணிக்கடிகை மூலமும் உரையும், மதுரைச் தமிழ்ச் சங்கம், செந்தமிழ் பிரசுரம் 13, சங்க முத்திர சாலை, மதுரை. இரண்டாம் பதிப்பு 1911.